டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 13.09.2026 ஞாயிற்றுக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 073- Madurai | Online Edition

# இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்புக்கு அரிய கனிமங்கள் இன்றியமையாதவை : மத்திய இணையமைச்சர் ஜிதேந்திர சிங்

புது தில்லி, செப்.12

இந்தியா வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் தனக்கென ஒரு உலகளாவிய பங்கை வடிவமைப்பதில் இப்போது நம்பிக்கையுடன் உள்ளது என்று மத்திய அறிவியல், தொழில் நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். இந்தியாவின் எரிசக்திப் பாதுகாப்பு, தொழில் துறைப் போட்டித்திறன், தேசியப் பாதுகாப்பு ஆகியவற்றிற்கு அரிய கனிமங்கள் இன்றியமையாதவை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில்துறை கூட்டமைப்பால் (சிஐஐ) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த, அரிய கனிமங்கள், உலோகங்கள் குறித்த 3-வது உலகளாவிய உச்சிமாநாட்டின் சிறப்புப் பொது அமர்வில் டாக்டர் ஜிதேந்திர சிங் இன்று (11.09.2026) உரையாற்றினார்.

தூய்மையான எரிசக்தி, மின்சார வாகனப் போக்குவரத்து, செமிகண்டக்டர்கள், தொலைத்தொடர்பு, விண்வெளி, பாதுகாப்பு, அணுசக்தி ஆகியவை தொழில்துறை மாற்றத்தின் முக்கிய உந்து சக்திகளாக உருவெடுத்து வருவதால், உலகப் பொருளாதாரம் ஒரு பெரும் மாற்றத்திற்கு உள்ளாகி வருகிறது என்று டாக்டர்



## விடுமுறை அறிவிப்பு

விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு அக்ரிடாக்டர்.இன் அலுவலகத்திற்கு 14.9.26 திங்கள்கிழமை விடுமுறை.
எனவே எமது அடுத்த மின்னிதழ் 16.9.26 புதன்கிழமை வெளிவரும்.

- நிர்வாகி

ஜிதேந்திர சிங் கூறினார். இந்தியா இப்போது இவற்றில் மிகுந்த நம்பிக்கையுடன் பங்கேற்று வருகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா தனது உள்நாட்டு தொழில்நுட்பத் திறன்களை வலுப்படுத்திக் கொள்ளும் அதே வேளையில், உலகளாவிய உத்திகளையும் சர்வதேச ஒத்துழைப்புகளையும் பின்பற்றுகிறது என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்தியா தனது தொழில்நுட்பப் பயணத்தில் ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது என்று டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார். நாட்டின் தொழில்நுட்பப் பயணமானது, அரசு, தொழில்துறை, ஆராய்ச்சியாளர்கள், புத்தொழில் நிறுவனங்கள், முதலீட் டாளர்கள் ஆகியோர் இணைந்து செயல்படுவதைப் பொறுத்தே அமையும் என்று அவர் கூறினார்.




# 10 நாட்களுக்கு இடி, மின்னலுடன் மழை எச்சரிக்கை!

சென்னை, செப்.12

தமிழகத்தில் கடந்த சில நாட்களாக பல்வேறு பகுதிகளில் வெயிலின் தாக்கம் அதிகரித்து வருகிறது. அதே நேரத்தில், வளிமண்டல சூழல் காரணமாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பல இடங்களில் மழை பெய்து வருகிறது.

இந்நிலையில், தமிழ்நாட்டில் 10 நாட்களுக்கு இடி, மின்னலுடன் மழை தொடர வாய்ப்புள்ளதாக தனியார் வானிலை கணிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

செப்டம்பர் 15 முதல் 22 வரை வேலூர், ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, சேலம், தர்மபுரி, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், திருச்சி, கரூர் மற்றும் நாமக்கல் உள்ளிட்ட மாவட்டங்களில் மழைக்கு வாய்ப்பு இருப்பதாக கூறப்பட்டுள்ளது.

மேலும் ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, விருதுநகர் மற்றும் தென்காசி உள்ளிட்ட மாவட்டங்களிலும் இடி, மின்னலுடன் கூடிய மழை பெய்யக் கூடும் என கணிக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 21 உள் மாவட்டங்களில் பகல் நேரங்களில் வெப்பம் அதிகமாக இருந்தாலும், மாலை அல்லது இரவு நேரங்களில் வானிலை மாறி இடியுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது.

இதனால் பொதுமக்கள் திடீர் மழை மற்றும் இடி, மின்னல் ஏற்படும் நேரங்களில் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும்.

குறிப்பாக திறந்தவெளிப் பகுதிகள் மற்றும் மரங்களுக்கு அருகில் நிற்பதை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.




அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

## வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**38. இஞ்சி சூப்**

**தேவையான பொருட்கள்**

இஞ்சி — 2 டேபிள்ஸ்பூன் (துருவியது)

பூண்டு — 3 பல்

மிளகு தூள் — ½ டீஸ்பூன்

உப்பு — தேவையான அளவு

**செய்முறை**

இஞ்சி, பூண்டை வதக்கி தண்ணீர் சேர்த்து 10 நிமிடம் கொதிக்கவிட்டு வடிகட்டி பரிமாறவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...



# மக்காச்சோளம் சாகுபடி - ஒரு பார்வை

**சாகுபடி முறைகள் மற்றும் பருவநிலை**

**1. மக்காச்சோளத்தின் முக்கியத்துவம்**

மக்காச்சோளம் ஒரு முக்கியமான தானியப் பயிராகும். மற்ற பயிர்களுடன் ஒப்பிடும் போது மக்காச்சோள சாகுபடியில் தொழிலாளர் தேவை குறைவு. பூச்சி மற்றும் நோய் தாக்குதலும் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் உள்ளது. சுமார் 100 – 105 நாட்களில் நல்ல விளைச்சலைத் தரக்கூடியது. ஆண்டு முழுவதும் பல்வேறு பருவங்களில் சாகுபடி செய்ய ஏற்ற பயிராகும்.

**2. பருவநிலை மாற்றத்தின் தாக்கம்**

வெப்பநிலை உயர்வு, வறட்சி, அதிக அல்லது குறைந்த மழைப் பொழிவு, கடல் மட்ட மாற்றம், பூச்சி நோய் தாக்குதலில் மாற்றம் போன்றவை மக்காச்சோள விளைச்சலைப் பாதிக்கின்றன.

அதிக வெப்பநிலை மகரந்தச் சேர்க்கையைப் பாதிக்கலாம். வறட்சியால் கதிர் மற்றும் மணியின் அளவு குறையும்.

அதிக மழையால் வயலில் நீர் தேக்கம் ஏற்படலாம். ஊட்டச் சத்துக்கள் குறைவாகக் கிடைப்பதால் பயிர் வளர்ச்சி பாதிக்கப்படும். சரியான பருவத்தில் கிடைக்கும் மழை மற்றும் நீர் மேலாண்மை நல்ல விளைச்சலுக்கு அவசியம்.

**3. மண்**

நல்ல வடிகால் வசதியுடைய, அதிக வளம் கொண்ட மண் மக்காச் சோளத்திற்கு ஏற்றது. களிமண் மற்றும் நீர் தேங்கும் நிலங்களைத் தவிர்க்க வேண்டும். மண் pH 5.5 – 8.0 வரை உள்ள நிலங்களில் பயிர் நன்றாக வளரும்.

**4. கோடை உழவு**

**கோடை உழவு செய்வதால் :**

மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறன் அதிகரிக்கும். பூச்சி, நோய் மற்றும் களை விதைகள் கட்டுப்படுத்தப்படும். முந்தைய பயிர் கழிவுகள் மண்ணுடன் கலக்கப்படும். இயற்கை உரங்கள் நன்றாக மக்க உதவும். மண் வளம் மேம்படும்.

### 5. உளிக்கலப்பை உழவு

2-3 ஆண்டுகளுக்கு ஒரு முறை உளிக்கலப்பை கொண்டு ஆழமாக உழுவதன் மூலம் கடின அடுக்கு உடைக்கப்படுகிறது. இதனால் மண்ணில் நீர் ஊடுருவல், காற்றோட்டம் மற்றும் வேர் வளர்ச்சி மேம்படும். விதைப்பு, உரம் மற்றும் நீர் மேலாண்மை

### 6. விதைப்புப் பருவம்

மக்காச்சோளம் பல்வேறு பருவங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

மானாவாரி : ஜூன் – ஜூலை

புரட்டாசிப் பட்டம் : செப்டம்பர் – அக்டோபர்

இறவைப் பயிர் : ஜனவரி – பிப்ரவரி

சித்திரைப் பட்டம் : ஏப்ரல் – மே

### 7. இயற்கை உரம்

தொழுஉரம், கம்போஸ்ட், தென்னை நார் கழிவு, சர்க்கரை ஆலைக் கழிவு போன்ற இயற்கை உரங்களைப் பயன்படுத்தலாம். இயற்கை உரங்கள் மண்ணின் இயற்பியல், வேதியியல் மற்றும் உயிரியல் பண்புகளை மேம்படுத்துகின்றன. அசோஸ்பைரில்லம், பாஸ்போபாக்டீரியா போன்ற உயிர் உரங்களையும் பயன் படுத்தலாம்.

### 8. விதைத் தேர்வு

நல்ல தரமான, சான்று பெற்ற விதைகளைத் தேர்வு செய்ய வேண்டும்.

வீரிய ஒட்டு ரகங்களுக்கு சுமார்6 கிலோ/ஏக்கர் ரகங்களுக்கு சுமார்8 கிலோ/ஏக்கர்விதை தேவைப்படும். விதைப்பு முறையை மண் தன்மை, மண் ஆழம், நீர் வசதி மற்றும் மண் வளத்தைப் பொறுத்து மாற்ற வேண்டும்.

### 9. இடைவெளி மற்றும் விதைப்பு

இறவைப் பயிர் : 60 X 20 செ.மீ.

மானாவாரி : 45 X 20 செ.மீ.

கரிசல் மண்ணில் விதைகளை மிகவும் ஆழமாக விதைக்கக் கூடாது. பொதுவாக 2-2.5 செ.மீ. ஆழத்தில் விதைப்பது ஏற்றது. செம்மண் பகுதிகளில் சுமார் 3-4 செ.மீ. ஆழத்தில் விதைக்கலாம்.

### 10. உரமிடுதல்

மண் பரிசோதனை அடிப்படையில் தழை, மணி மற்றும் சாம்பல் சத்துக்களை வழங்க வேண்டும். உரங்களைப் பிரித்து இடுவதன் மூலம் பயிரின் வெவ்வேறு வளர்ச்சி நிலைகளில் ஊட்டச்சத்து கிடைப்பதை உறுதி செய்யலாம்.

### 11. களை மேலாண்மை

களைகள் பயிருடன் நீர், ஊட்டச்சத்து மற்றும் இடத்திற்குப் போட்டியிடுவதால் விளைச்சல் குறையும். விதைத்த ஆரம்ப நிலை யிலேயே களைகளை கட்டுப்படுத்த வேண்டும். தேவைக்கேற்ப




களைக்கொல்லி மற்றும் கைக்களை எடுப்பு முறைகளைப் பயன்படுத்தலாம்.

**12. நீர் மேலாண்மை**

மக்காச்சோளத்திற்கு மொத்தமாக சுமார் 600 - 700 மி.மீ. நீர்தேவைப்படுகிறது. குறிப்பாக :

குருத்து மற்றும் வளர்ச்சி நிலை, பூக்கும் நிலை, மகரந்தச் சேர்க்கை நிலை, மணி உருவாகும் நிலை, ஆகிய காலங்களில் நீர் பற்றாக்குறை ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நீர் பற்றாக்குறை உள்ள பகுதிகளில் அதிக நீர் தேவைப்படும் பயிர்களுக்கு மாற்றாக மக்காச்சோளத்தைத் தேர்வு செய்யலாம்.

**13. சொட்டு நீர் மற்றும் உரப்பாசனம்**

சொட்டு நீர் உரப்பாசனம் மூலம் நீர் மற்றும் உரங்களை பயிரின் வேர் பகுதிக்கு நேரடியாக வழங்க முடியும். இதனால் நீர் மற்றும் உரப் பயன்பாட்டுத் திறன் அதிகரித்து, களை மற்றும் நோய் தாக்குதலும் குறையலாம்.

**14. அறுவடை**

கீழ் இலைகள் காய்ந்து, மேல் இலைகள் மஞ்சள் நிறமாக மாறுவது முதிர்ச்சியின் அறிகுறியாகும். கதிரின் வெளிப்புறத் தோல் பழுத்து உலர்ந்ததும், மணிகள் கடினமாகவும் உலர்ந்தும் காணப் படும். அப்போது அறுவடை செய்யலாம்.

சரியான முதிர்ச்சியில் இயந்திர அறுவடை மேற்கொண்டால் மானாவாரியில் சுமார் 4,500 - 5,500 கிலோ/எக்டர், இறவைப் பயிரில் 6,000 - 7,000 கிலோ/எக்டர்வரை விளைச்சல் பெற முடியும். அறுவடைக்குப் பிறகு மணிகளை நன்றாக உலர்த்தி பாதுகாப்பாக சேமிக்க வேண்டும்.

தகவல் : *மு.புனிதாவதி, தொழில்நுட்ப வல்லுநர் (உழவியல்), ஹேரன்ஸ்ரோவர் வேளாண் அறிவியல் மையம், வாலிகண்டபுரம், பெரம்பலூர் - 621 115. கைபேசி எண் : 88382 55728.*



# மாநில அளவிலான நாட்டுக்கோழி வளர்ப்பு பயிலரங்கு மற்றும் கண்காட்சி




கள்ளக்குறிச்சி, செப்.12

இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்தின், வேளாண் அறிவியல் நிலையம் (விழுப்புரம் II), காளசமுத்திரம், கள்ளக்குறிச்சியில் 11.09.26 அன்று நுண்கீரை, அசோலா பசுந்தீவனங்களைக் கொண்டு அறிவியல் பூர்வமாக நாட்டுக்கோழி வளர்ப்பு என்ற தலைப்பில் மாநில அளவிலான ஒரு நாள் பயிலரங்கு மற்றும் கண்காட்சி நடைபெற்றது.

இப்பயிலரங்கில் 55 விவசாயிகள், கிராமப்புற பெண்கள் மற்றும் இளைஞர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர். குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய புறக்கடை கோழி வளர்ப்பை ஊக்குவிப்பதுடன், விவசாயிகளிடையே கொண்டு செல்வதே இப்பயிலரங்கின் முக்கிய நோக்கமாகும்.

பயிலரங்கை தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் விரிவாக்கக் கல்வி இயக்குநர் முனைவர் ப.செல்வராஜ் தலைமை தாங்கி, புறக்கடை கோழி வளர்ப்பு காலநிலை மாற்றத்தைத் தாங்கக்கூடிய சிறு கால்நடை வளர்ப்பு முறை என்ற தலைப்பில் சிறப்புரையாற்றினார். புறக்கடை கோழி வளர்ப்பின் முக்கியத்துவம், நிகழ்வில் உள்ள எல்-நினோ உள்ளிட்ட காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற சிறு கால்நடை வளர்ப்பு முறையாக அதன் பங்கு மற்றும் கிராமப்புற மக்களின் வாழ்வாதார மேம்பாட்டில் அதன் வாய்ப்புகள் குறித்து அவர் விளக்கமளித்தார்.

மேலும், பயிலரங்கின் ஒரு பகுதியாக விவசாயிகள் பயிற்சி பெறுவதற்காக நிலையத்தில் புதிதாக அமைக்கப்பட்ட கடகநாத் கோழிகள் வளர்ப்பு, முள்ளில்லா சப்பாத்திக்கள்ளி வளர்ப்பு, மூலிகை பண்ணை, கோழி எச்சத்தை கொண்டு உரம் தயாரித்தல் உள்ளிட்ட 11 மாதிரி அலகுகளை துவக்கி வைத்தார்.


பயிலரங்கை நிலையத்தின் தலைவர் முனைவர் மொ.ச. கண்ணதாசன், ஒருங்கிணைத்தார். பயிலரங்கில் முனைவர் வடிவு, வினோத், லாவண்யா, மகேஸ்வரன், ஸ்ரீமதி, முரளி, இளைய பாரதி, பாலமுருகன், மங்களதேவி, தீபிகா, தாவூத் இப்ராஹிம், உள்ளிட்ட பல்கலைக்கழகத்தின் தொழில் நுட்ப வல்லுநர்கள் கலந்து கொண்டு, இலாபகரமான கோழி வளர்ப்பு முறைகள், இனத் தேர்வு, இடத் தேர்வு மற்றும் கொட்டகை அமைப்பு, தீவன மேலாண்மை, நோய் தடுப்பு மேலாண்மை, வங்கி கடன் ஆலோசனை உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளில் தொழில்நுட்ப விளக்கங்கள் வழங்கப்பட்டன.

பயிற்சியின் சிறப்பம்சமாக கோழிகளுக்கு தடுப்பூசி செலுத்தும் பொழுது கோழிகளை பராமரிப்பதில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள், அலகு வெட்டுதல், இறந்த கோழிகளின் அறிகுறிகளை புகைப்படங்களாக பதிவு செய்து, அவற்றைக் கொண்டு கால்நடை மருத்துவரின் தொலைநிலை ஆலோசனைகளை பெறுதல், நுண்கீரை வளர்ப்பு மற்றும் அசோலா வளர்ப்பு ஆகியவை தொடர்பான நேரடி செய்முறை விளக்கங்கள் நடத்தப்பட்டன.

பயிற்சியின் ஒரு பகுதியாக வேளாண் அறிவியல் நிலைய வளாகச் சுற்றுலா, கால்நடை மற்றும் வேளாண் இடுபொருட்கள், தொழில்நுட்பங்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் கண்காட்சியை பார்வையிட்டு, பங்கேற்பாளர்கள் கால்நடை மற்றும் வேளாண் தொடர்பான தொழில்நுட்பங்களை அறிந்து கொண்டனர்.

இப்பயிற்சியின் மூலம் பங்கேற்பாளர்கள் குறைந்த முதலீட்டில் புறக்கடை கோழி வளர்ப்பை மேற்கொண்டு, குடும்ப வருமானத்தை அதிகரிப்பதற்கான தொழில்நுட்ப அறிவு மற்றும் நடைமுறைத் திறன்களை பெற்றனர். மேலும், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளக்கூடிய நிலையான சிறு கால்நடை வளர்ப்பு முறையாக நாட்டுக்கோழி வளர்ப்பின் முக்கியத்து வத்தையும் அறிந்து கொண்டனர். பயிலரங்கின் ஏற்பாட்டுப் பணிகளை ரமணி, ரம்யா உள்ளிட்ட பணியாளர்கள் மேற்கொண்டனர்.

இதனை, *முனைவர் மொ.ச.கண்ணதாசன், இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், ICAR வேளாண் அறிவியல் நிலையம் (விழுப்புரம் II), காளசமுத்திரம், கள்ளக்குறிச்சி – 606 301. அலைபேசி : 94872 58877* தெரிவித்தார்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# பட்டாம் பூச்சி மாதம் ஏது தெரியுமா?

2017 ஆம் ஆண்டு முதல் தில்லியில் தொடங்கபட்ட அமைப்பு செப்டெம்பர் மாதத்தை 'பட்டாம் பூச்சி மாதமாக' நாடு முழுவதுமாக கொண்டாடப்பட்டு வருகிறது.



**அப்படி என்ன சிறப்பு இந்த மாதத்தில்?**

இந்த மாதம் இந்தியாவின் பல பகுதிகளில் பட்டாம் பூச்சி களை காண மிகவும் ஏற்ற காலமாகும். பருவ மழைக்கு பிந்தைய தாவர வளர்ச்சி பூக்கள் மற்றும் சீரான வானிலை ஆகியவை பட்டாம் பூச்சிகளின் (BUTTERFLY) செயல்பாட்டை அதிகரிக்க உதவுகின்றன.

பட்டாம் பூச்சிகள் வெறும் அழகான உயிரினங்கள் மட்டுமல்ல, அவை சுற்றுச்சூழல், ஆரோக்கியத்தின் முக்கிய குறியீடுகள். பட்டாம் பூச்சிகள் பல்லுயிர் பெருக்கத்திற்கு முக்கிய காரணியாக விளங்குகின்றன.

பட்டாம் பூச்சி / வண்ணத்து பூச்சி என்பது கண்ணைக் கவரும் மிக அழகான நிறங்கள், இறக்கைகள் உள்ள பூச்சி இனமாகும். இதை BUTTERFLY என்றும் LEPIDOPTERAN SUPER FAMILY யை சார்ந்தது.

**பட்டாம் பூச்சியின் வாழ்கை வட்டம் எப்படி?**

பட்டாம் பூச்சியின் வாழ்க்கை வட்டம் (LIFE CYCLY) நான்கு முக்கிய கட்டங்களைக் கொண்டு முழு உருமாற்றமாக META-MORPHOSIS அமைகிறது.

**முட்டை (EGG) – லார்வா (புழு பருவம்)**

கூட்டுப்புழு பருவம் (PUPA) – முழுமையான வண்ணத்து பூச்சி (ADULT) பட்டாம் பூச்சி சாரசரியாக 2 முதல் 6 வாரங்கள் வரை உயிர் வாழ்கின்றன. இதனுடைய உணவு மலரில் உள்ள மது தான்.

**நமது இந்தியாவில் எத்தனை இனங்கள் உள்ளன?**

நமது நாட்டில் 1300க்கும் மேற்பட்ட வண்ணத்து பூச்சி இனங்கள் காணப்படுகின்றன. இது உலகின் மொத்த எண்ணிக்கையில் 10% மட்டுமே. மேற்கு தொடர்ச்சி மலைகள், அருணாச்சல பிரதேசம், சிக்கிம், மணிப்பூர் மற்றும் மேகாலயா மாநிலங்களில் அதிகமாக காணலாம்.

**தமிழ்நாட்டில் எத்தனை இனங்கள் உள்ளன?**

தமிழகத்தில் 329 சிற்றினங்கள் (பட்டாம் பூச்சி) காணப் படுகின்றன. தமிழகத்தின் மாநில பட்டாம் பூச்சியாக 'தமிழ் மறவன்' (TAMIL YEOMAN) யாகும். இதனை மலைச்சிறகன்' என்றும் அழைக்கப்படுகின்றன.

**வண்ணத்து பூச்சி பூங்கா எங்கெங்கு உள்ளது?**

தமிழகத்தில் வண்ணத்து பூச்சி பூங்காக்கள் (BUTTERFLY PARK) திருச்சி – ஸ்ரீரங்கம் மற்றும் சென்னை – வண்டலூர் ஆகிய இடங்களில் உள்ளன.

பட்டாம் பூச்சிகளை பல்லுயிர் பாதுகாப்புக்கு உதவும் வகையில், பட்டாம் பூச்சிகளை நாம் பார்க்க வேண்டும். அவற்றின் வழித்தடங்களை பாதுகாப்போம், பள்ளி கல்லூரி மாணவர்கள் தங்களுடைய பகுதியில் பறக்கும் பட்டாம் பூச்சி இனங்களை பதிவு செய்வோம்.

**என்ன** வண்ணத்து **பூச்சிகள் பறக்குதா?**

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

தலைக் கவசம் உயிர்க் கவசம்
முறையாக தலைக் கவசம் அணிவோம்

# ‘ஆடு வளர்ப்பவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி‘




தேனி, செப்.12

தேசிய கால்நடை இயக்க பங்களிப்புடன் ‘விரிவாக்கக் கல்வி முறைகள் மூலம் செம்மறியாடு மற்றும் வெள்ளாடு வளர்ப்போரிடையே தொழில்முனைவோர் திறன்களை உருவாக்குதல்‘ என்ற திட்டமானது கால்நடை விரிவாக்கக் கல்வித் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக தேனி மாவட்டத்தை சார்ந்த தொழில் முனைவோர்களுக்கு ‘ஆடு வளர்ப்பவர்களுக்கான திறன் மேம்பாட்டுப் பயிற்சி‘ இக்கல்லூரியில் 07.09.26 முதல் 11.09.26 வரை நடத்தப்பட்டது. இதில், திட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் முனைவர் சே.செந்தில்குமார்,பயனாளிகளை வரவேற்று இத்திட்டத்தின் செயல்பாடுகளை விரிவாக எடுத்துரைத்தார்.

தேனி, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் முதல்வர் முனைவர் கு.பொன்னுதுரை, இத்திட்டப் பயனாளிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் பயிற்சி புத்தகங்களை வழங்கி, தலைமையுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், மதுரை மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் / மகளிர் திட்ட இயக்குநர் மருத்துவர் சு.சுரேஷ், இத்திட்டத்தின் இடுபொருட் களான ஆடுகளுக்கான அடர் தீவனம் மற்றும் தனுவாசு தாது உப்புக் கலவை வழங்கி சிறப்புரையாற்றினார்.

நிறைவாக, இத்திட்டத்தின் துணை ஒருங்கிணைப்பாளர் முனைவர் கோ.திருமலைச்சாமி, நன்றியுரை நவின்றார். இந்நிகழ்சியை மருத்துவர் சி.ராமகிருஷ்ணன், தொகுத்து வழங்கினார். இப்பயிற்சியில் மொத்தம் 30 தொழில்முனை வோர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

# துளிநீரில் விளைச்சல்! - ஒரு பார்வை

தண்ணீரை காப்போம்
தரணியை காப்போம்!



குறைந்த நீரில் கூடுதல் மகசூல் காண்போம்! மழையை நம்பி வாழும் மண்ணின் மைந்தன் விவசாயி, மழை பொய்த்தாலும் கலங்காதே, நீரைச் சேமித்து பயிர் காப்பாய்!



வானம் தரும் மழைத்துளியை வீணாக்காமல் சேமிப்போம்,
பண்ணைக் குட்டை, நீர்த்தேக்கம் அமைத்து வளம் பெருக்குவோம்!

சொட்டுச் சொட்டாய் நீர் கொடுத்து வேர் அருகே பயிர் வளர்ப்போம்,
வீணாகும் நீரைத் தடுத்துவிட்டு விளைச்சல் பெருக்கி மகிழ்வோம்!
தெளிப்புநீரும் துணை நிற்கும், நீர்விரயத்தை குறைத்திடும்;
குறைந்த நீரில் நிறைந்த மகசூல் விவசாயியின் வாழ்வை உயர்த்திடும்!

நிலத்தை நன்கு சமப்படுத்தி, நீரை சீராய் பரப்பிடுவோம்;
காய்ந்த இலை, சருகு மூடாக்கால் மண்ணின் ஈரத்தை காத்திடுவோம்!

பயிரின் தேவையை அறிந்து கொண்டு பாசனத்தை முறையாய் செய்வோம்;
பூக்கும் காலம், காய்க்கும் காலம் தேவையான நீரை வழங்குவோம்!

வயலில் நீர் தேங்கி நின்றால் வேர்கள் மூச்சுத் திணறிடுமே;
நல்ல வடிகால் அமைத்துவிட்டால் பயிர்கள் நன்றாய் செழித்திடுமே!

அளவுக்கு மீறிய நீர்ப்பாசனம் மண்ணின் வளத்தை கெடுத்திடுமே;
உப்புத்தன்மை அதிகமானால் மகசூலும் குறைந்திடுமே!

குறைந்த நீர் தேவைப்படும் பயிர் வகைகளைத் தேர்ந்தெடுப்போம்;
சிறுதானியம், நிலக்கடலை என நீருக்கேற்ற பயிர் வளர்ப்போம்!

துளி நீரை வீணாக்காமல் தொட்டிலாக மண்ணைக் காப்போம்;
நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தி நிலையான வளத்தை உருவாக்குவோம்!

நீர் இருந்தால் விவசாயம், விவசாயம் இருந்தால் உணவு ;
நீர்வளத்தைப் பாதுகாப்போம் – நாளைய தலைமுறையை வாழவைப்போம்!

தகவல் : ***கா.அரிபுத்திரன், வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்.***

# பயிர் பல்வகைப்படுத்துதல் குறித்த உள்மாநில விவசாயிகள் கண்டுணர்வு பயணம்




மதுரை, செப்.12

மதுரை மாவட்டம், கள்ளிக்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமைத் திட்டத்தின் கீழ் 'பயிர் பல்வகைபடுத்துதல்' குறித்த உள்மாநில விவசாயிகள் கண்டுணர்வு பயணமானது 06.09.26 முதல் 10.09.26 வரை ஹைதராபாத்தில் உள்ள தேசிய தாவர சுகாதார மேலாண்மை நிறுவனம், இந்திய சிறுதானிய ஆராய்ச்சி மையம், அரை வறண்ட வெப்பமண்டலங்களுக்கான சர்வதேச பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனம், மத்திய வறண்ட நில வேளாண்மை ஆராய்ச்சி மையம் ஆகிய இடங்களில் கண்டுணர்வு பயமானது நடைபெற்றது.

தேசிய தாவர சுகாதார மேலாண்மை நிறுவனத்தில் ஆராய்ச்சி-யாளர்கள் விவசாயிகளுக்கு தங்களது நிறுவனத்தில் செயல் பாடுகள் மற்றும் கண்டுபிடிப்புகள் பற்றி விளக்கினார்கள்.

இந்திய சிறுதானிய ஆராய்ச்சி மையத்தில் ஹேமாசங்கர், சிறுதானியங்களை மதிப்புக்கூட்டும் பொருளாக மாற்றும் தொழில்நுட்பம் குறித்தும் சிறுதானிய சிற்றுண்டிகள் தயாரிக்கும் முறைகள் பற்றியும் விளக்கினார். அரை – வறண்ட வெப்ப மண்டலங்களுக்கான சர்வதேச பயிர்கள் ஆராய்ச்சி நிறுவனத்தில் கல்பனா, விவசாயிகளுக்கு அந்நிறுவனத்தின் செயல் பாடுகள் மற்றும் புதிய கண்டுப்பிடிப்பு இரகங்கள் பற்றியும் விளக்கினார். இந்த கண்டுணர்வு பயணத்தில் கள்ளிக்குடி, டி.கல்லுப்பட்டி, சேடப்பட்டி, மதுரை மேற்கு, செல்லம்பட்டி, அலங்காநல்லூர் ஆகிய வட்டாரத்தைச் சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# கொடுமுடி வட்டாரத்தில் பயறுவகை பயிரில் ஒருங்கிணைத்த பயிர் மேலாண்மை




ஈரோடு, செப்.12

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், வேளாண்மை துறையின் கீழ் செயல்படும் வட்டார தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் கொல்லேன்கோவில் கிராமத்தில் வருவாய் கிராமத்தில் குமரகுரு பல்கலைக்கழக பேராசிரியர் இளங்கோ பயறு வகை பயிரில் நோய் மற்றும் பூச்சி மேலாண்மை பற்றியும் அதை கட்டுப்படுத்தும் முறை பற்றியும் விரிவாக எடுத்து கூறினார்.

மேலும் முத்துவிக்ரம் இயற்கை விவசாயி மற்றும் மருத்துவர் தங்கள் பின்பற்றி வரும் இயற்கை விவசாய முறைகள் பற்றியும் அதில் பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் பற்றியும் தெளிவாக எடுத்து கூறினார். வேளாண் அறிவியல் நிலைய விஞ்ஞானி ஜான் பிரபாகர் வேளாண் நிலைய செயல்பாடுகள் பற்றியும் அதில் நடைமுறைபடுத்தும் திட்டங்கள் பற்றியும் பேசினார். ஜெகன்நாதன், விதைசான்று அலுவலர் விதை இருப்பு மற்றும் விதை பண்ணை அமைக்கும் முறைகள் பற்றியும் கூறினார். நடமாடும் மண் பரிசோதனை நிலைய வேளாண் அலுவலர் மண் மாதிரிகள் எடுக்கும் முறை பற்றியும் மாநில உள்ள சத்துகள் பற்றியும் கூறினார். நடமாடும் மண் பரிசோதனை வண்டி மூலம் விவசாயிகள் தங்களது மண் மற்றும் தண்ணீரின் உள்ள சத்துகள் மற்றும் அளவுகள் அளவுகள் பற்றி அறிய விவசாயிகள் ஆர்வமாக மண் மற்றும் தண்ணிர் மாதிரிகள் எடுத்து வரபட்டன. இதில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில் நுட்ப மேலாளர் ரேணுகா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மஞ்சுரேகா, சிதம்பரம் ஆகியோர் செய்து இருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# குறைந்த நீரில் அதிக மகசூல் பெறுவது எப்படி?

நீர் சேமிப்பே நாளைய விவசாயத்தின் வெற்றிக்கான திறவுகோல்

'நீரின்றி அமையாது உலகு' என்ற திருவள்ளுவரின் வாக்கு இன்று விவசாயத்தில் மிகவும் பொருத்தமானதாக உள்ளது. உலகின் மொத்த நீரில் சுமார் 97 சதவீதம் கடல் நீராகவும், சுமார் 2.5 சதவீதம் மட்டுமே நன்னீராகவும் உள்ளது. அதிலும் பெரும்பாலான நன்னீர் பனிப்பாறைகள் மற்றும் ஆழமான நிலத்தடி நீராக இருப்பதால், மனித பயன்பாட்டிற்கு கிடைக்கக்கூடிய நீரின் அளவு மிகவும் குறைவு.

இந்தியாவில் பயன்படுத்தப்படும் மொத்த நன்னீரில் சுமார் 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட நீர் விவசாயத்திற்கே பயன்படுத்தப்படு கிறது. ஆனால், மக்கள் தொகை அதிகரிப்பு, நகரமயமாக்கல், தொழில்மயமாக்கல், காலநிலை மாற்றம் மற்றும் நிலத்தடி நீர் அளவு குறைதல் ஆகிய காரணங்களால், எதிர்காலத்தில் நீரின் தேவை மேலும் அதிகரிக்கும் என்று பல ஆய்வுகள் தெரிவிக் கின்றன.

தமிழ்நாட்டில் மழை ஒழுங்கற்ற முறையில் பெய்வது, நீண்டகால வறட்சி, கோடை வெப்பநிலை உயர்வு, நிலத்தடி நீர் தாழ்வு போன்ற காரணங்களால் விவசாயிகள் பல்வேறு சவால்களை எதிர்கொள் கின்றனர். இத்தகைய சூழலில், 'குறைந்த நீரில் அதிக மகசூல் பெறுவது எப்படி?' என்பது ஒரு தொழில்நுட்பக் கேள்வி மட்டுமல்ல; அது விவசாயத்தின் எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கியமான விடயமாகும்.

**நீர் பயன்பாட்டுத் திறன் (Water Use Efficiency) என்றால் என்ன?**

ஒரு லிட்டர் தண்ணீரைப் பயன்படுத்தி அதிக அளவு மகசூல் பெறும் திறனே நீர் பயன்பாட்டுத் திறன் (Water Use Efficiency) எனப்படுகிறது.

உதாரணமாக, ஒரே அளவு நீரை பயன்படுத்தி ஒரு விவசாயி 20 மூட்டை நெல் பெறுகிறார். மற்றொரு விவசாயி அதே நீரில் 28 மூட்டை பெறுகிறார். இரண்டாவது விவசாயியின் நீர் பயன்பாட்டுத் திறன் அதிகமாகும். இன்றைய நவீன வேளாண்மை 'அதிக நீர் பயன்படுத்துவது' என்பதைக் காட்டிலும் 'நீரை திறமையாக பயன்படுத்துவது' என்பதையே முக்கியமாகக் கருதுகிறது.

**நீர் பற்றாக்குறைக்கான முக்கிய காரணங்கள்**

பருவமழை பொய்த்தல், தமிழ்நாடு வடகிழக்கு மற்றும் தென் மேற்கு பருவமழையை நம்பியுள்ளது. மழை குறைவதால் நீர்த்தேக்கங்கள் நிரம்பாமல் போகின்றன.

**நிலத்தடி நீர் குறைதல்**

ஆழ்துளைக் கிணறுகள் அதிகரித்ததால் பல இடங்களில் நிலத்தடி நீர் 500 - 1000 அடி ஆழத்திற்கும் கீழே சென்றுள்ளது.

**காலநிலை மாற்றம்**

வெப்பநிலை உயர்வால் மண்ணிலிருந்தும் தாவரங்களிலிருந்தும் நீர் விரைவாக ஆவியாகிறது.

**பாரம்பரிய வெள்ளப்பாசனம்**

வயல்களில் அதிகளவு தண்ணீர் தேக்கி பாசனம் செய்வதால் 40–50% நீர் வீணாகிறது.

**குறைந்த நீரில் அதிக மகசூல் பெற 12 சிறந்த தொழில்நுட்பங்கள்**

**1. சொட்டு நீர்ப்பாசனம் – நீர் சேமிப்பின் அரசன்**

சொட்டு நீர்ப்பாசனத்தில், தண்ணீர் குழாய்கள் மூலம் துளித் துளியாக தாவரத்தின் வேர் பகுதிக்கு வழங்கப்படுகிறது.

**நன்மைகள்**

40 - 70% வரை நீர் சேமிப்பு

20 - 40% வரை மகசூல் அதிகரிப்பு

**உரத்தை நீருடன் சேர்த்து வழங்கலாம் (Fertigation)**

களைகள் குறையும், தொழிலாளர் செலவு குறையும், ஏற்ற பயிர்கள் : தென்னை, வாழை, மா, கொய்யா, திராட்சை, கரும்பு, பருத்தி, மிளகாய், தக்காளி.

**2. தெளிப்பு நீர்ப்பாசனம்**

மழையைப் போல நீரைத் தெளிக்கும் முறை.

**பயன்கள்**

மேட்டு நிலங்களுக்கு ஏற்றது. மணல் மண்ணில் சிறந்தது. புல்வகைகள் மற்றும் காய்கறிகளுக்கு ஏற்றது. மண் அரிப்பைக் குறைக்கிறது.

**3. Alternate Wetting and Drying (AWD) நெல் சாகுபடியில் புரட்சி**

நெல் வயலில் எப்போதும் தண்ணீர் தேக்கி வைப்பதற்குப் பதிலாக, குறிப்பிட்ட கால இடைவெளியில் மட்டும் பாசனம் செய்வதே புதிம் முறை.

**நன்மைகள்**

20 – 30% நீர் சேமிப்பு, மீத்தேன் வாயு வெளியேற்றம் குறையும், வேர் வளர்ச்சி மேம்படும், மகசூல் பாதிக்கப்படாது.

## 4. System of Rice Intensification (SRI)

குறைந்த விதை, குறைந்த நீர், அதிக மகசூல் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்ட நெல் சாகுபடி முறை.

**முக்கிய அம்சங்கள்**

இளம் நாற்று, ஒற்றை நாற்று நடவு, அகல இடைவெளி, இடைவிடை பாசனம்

## 5. மழை நீர் சேகரிப்பு

மழைநீரை சேமிப்பது எதிர்கால பாசனத்திற்கு முதலீடு செய்வதற்கு சமம்.

**செய்யக்கூடிய பணிகள்**

பண்ணைக் குட்டை, வரப்புகள் அமைத்தல், நீர்தடுப்பு அணைகள், பண்ணை குளங்கள், ஊடுருவல் குழிகள்.

## 6. மூடாக்கு (Mulching)

மண்ணின் மேற்பரப்பை வைக்கோல், உலர்ந்த இலை, தேங்காய் நார் அல்லது பிளாஸ்டிக் மூலமாக மூடுவது.

**நன்மைகள்**

ஆவியாதல் 50% வரை குறையும், களைகள் குறையும், மண் வெப்பநிலை சீராக இருக்கும், நுண்ணுயிர்கள் அதிகரிக்கும்.

## 7. கரிமப்பொருட்களை அதிகரித்தல்

மண்ணில் கரிமப்பொருட்கள் அதிகமாக இருந்தால் அது கடற்பஞ்சு போல நீரை சேமித்து வைத்திருக்கும்.

**பயன்படுத்த வேண்டியவை**

தொழு உரம், மண்புழு உரம், பசுந்தாள் உரம், உயிரி உரங்கள், பயிர் கழிவுகள்

## 8. மண் பரிசோதனை

தேவையான அளவு உரமிடுவது மட்டுமே தாவர வளர்ச்சியை மேம்படுத்தும்.

அதிக நைட்ரஜன் உரம் அளித்தால், தாவர வளர்ச்சி அதிகரிக்கும், நீர் தேவை அதிகரிக்கும், நோய் தாக்குதலும் கூடும்.

**9. சரியான பயிர் மற்றும் ரகத் தேர்வு**

நீர் பற்றாக்குறை பகுதிகளில்

கம்பு, சோளம், கேழ்வரகு, சாமை, தினை, வரகு, உளுந்து, பாசிப்பயறு, கொள்ளு போன்ற பயிர்கள் சிறந்த தேர்வாகும்.

மேலும், வறட்சியைத் தாங்கும் மேம்பட்ட ரகங்களைத் தேர்வு செய்வது மிகவும் முக்கியம்.

**10. துல்லிய வேளாண்மை (Precision Agriculture)**

GPS, GIS, செயற்கைக்கோள் படங்கள், ட்ரோன்கள், மண் ஈரப்பத




உணரிகள், ஞூலிவீ சாதனங்கள் போன்ற தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, பயிருக்கு தேவையான அளவு நீரை மட்டுமே வழங்கும் முறையாகும்.

**நன்மைகள்**

நீர் வீணாகாது, உர பயன்பாடு குறையும், நோய்கள் ஆரம் பத்திலேயே கண்டறியப்படும், மகசூல் அதிகரிக்கும்.

**11. செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ஸ்மார்ட் பாசனம்**

AI தொழில்நுட்பம்,

மழை முன்னறிவிப்பு, மண் ஈரப்பதம், வெப்பநிலை, காற்றின் ஈரப்பதம் ஆகிய தகவல்களை ஆய்வு செய்து, எப்போது, எவ்வளவு பாசனம் செய்ய வேண்டும் என்பதை விவசாயி களுக்கு தெரிவிக்கிறது.

மொபைல் செயலிகள் மூலம் உடனடி ஆலோசனைகளும் கிடைக்கின்றன.

**12. ஒருங்கிணைந்த பண்ணையம் (Integrated Farming System)**

பயிர், கால்நடை, மீன், கோழி, மரவளர்ப்பு போன்றவற்றை ஒருங்கிணைத்து மேற்கொள்வதன் மூலம் நீர் மற்றும் வளங் களை திறமையாக பயன்படுத்த முடியும்.

விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகள்

✔ அதிகாலை அல்லது மாலை நேரங்களில் மட்டும் பாசனம் செய்யவும்.

✔ வயல்களை சமப்படுத்தி (Laser Land Leveling போன்ற முறைகள்) பாசனம் செய்யவும்.

✔ களைகளை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தவும்.

✔ மண் பரிசோதனை செய்து உரமிடவும்.

✔ மழைநீரை சேகரிக்கவும்.

✔ சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனத்திற்கு அரசு மானியங்களைப் பயன்படுத்திக் கொள்ளவும்.

✔ வானிலை முன்னறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு பாசன திட்டமிடவும்.

## தமிழ்நாட்டிற்கான சிறப்பு பரிந்துரைகள்

தமிழ்நாட்டின் வறண்ட மற்றும் அரை வறண்ட பகுதிகளில், சொட்டு நீர்ப்பாசனம், மழைநீர் சேகரிப்பு, மூடாக்கு, வறட்சியைத் தாங்கும் ரகங்கள், பருப்பு மற்றும் சிறுதானிய சாகுபடி, துல்லிய பாசன மேலாண்மை ஆகியவற்றை ஒருங்கிணைத்து செயல் படுத்தினால், குறைந்த நீரிலும் நல்ல மகசூல் பெற முடியும்.

## முடிவுரை

எதிர்காலத்தில் விவசாயத்தின் வெற்றி, அதிக அளவு நீரைப் பயன்படுத்துவதில் இல்லை; ஒவ்வொரு துளி நீரையும் அறிவியல் அடிப்படையில் திறமையாகப் பயன்படுத்துவதில் தான் உள்ளது. நீர் என்பது ஒரு இயற்கை வளம் மட்டுமல்ல; அது உணவுப் பாதுகாப்பின் அடித்தளமும், விவசாயியின் வாழ்வாதாரத்தின் முதுகெலும்புமாகும்.

காலநிலை மாற்றம், வறட்சி மற்றும் நீர்ப்பற்றாக்குறை போன்ற சவால்களை சமாளிக்க, சொட்டு மற்றும் தெளிப்பு நீர்ப்பாசனம், மழைநீர் சேகரிப்பு, மூடாக்கு, மண் ஆரோக்கிய மேலாண்மை, துல்லிய வேளாண்மை, செயற்கை நுண்ணறிவு, மற்றும் ஒருங்கிணைந்த பண்ணையம் ஆகிய நவீன தொழில் நுட்பங்களைப் பின்பற்றுவது காலத்தின் கட்டாயமாகியுள்ளது.

'நீர் சேமித்தால் நிலம் செழிக்கும்; நிலம் செழித்தால் விவசாயி வளம் பெறுவார்; விவசாயி வளம் பெற்றால் நாடு வளம் பெறும்.' எனவே, 'ஒவ்வொரு துளி நீரும் ஒரு பொக்கிம்' என்ற எண்ணத்துடன் அறிவியல் சார்ந்த நீர் மேலாண்மையை நடைமுறைப்படுத்துவோம். குறைந்த நீரில் அதிக மகசூல் பெற்று, நிலையான மற்றும் இலாபகரமான விவசாயத்தை உருவாக்குவோம்.

தகவல் : ***வெங்கடேஷ் ம, முதுநிலை உதவிப் பேராசிரியர் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), அபிநயா ரா, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி –621 104.***



**Rithvik Pipe**

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்** நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்** ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்** தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்** அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக** ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING** விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்** ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street,
Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony,
R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**